# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● பிப்ரவரி 05 2023

Weekly E-paper ● February 05, 2023





## மோடி அரசின் முகத்திரை கிழிகிறது!

சுப.வீரபாண்டியன்

## இந்திய ஒற்றுமை நடைப்பயணம்

ஆ.கோபண்ணா

## தமிழர்களுக்கு மறுமலர்ச்சியைக் கொடுங்கள்!

தலையங்கம்

## புல்டோசர் அரசியல்

நூல் அறிமுகம்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● பிப்ரவரி 05 2023 Weekly E-paper ● February 05, 2023

# மோடி அரசின் முகத்திரை கிழிகிறது!

**சுப.வீரபாண்டியன்**

சென்ற வாரம் நம் இதழின் தலையங்கத்தில், அதானி பற்றி எழுதியிருந்தோம். இந்த ஒரு வாரத்திற்குள் மேலும் என்னென்னவோ நடந்துவிட்டன!

அதானி குழுமத்தின் பங்குச்சந்தை மதிப்பு மேலும் மேலும் சரிந்து கொண்டே போகிறது. அது அதானி என்கிற ஒரு தனி மனிதனின் சரிவு இல்லை. இந்தியப் பொருளாதாரத்தின் சரிவாக இருக்கிறது. அதனால்தான் நாமும் கவலை கொள்ள நேர்கிறது!

40 ஆண்டுகளுக்கு முன் அதானி ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த சிறு வணிகர். பத்து நாள்களுக்கு முன் உலகத்தில் மூன்றாவது பணக்காரர். இன்றோ இருபதாவது இடத்திற்கு அவர் போய்ச் சேர்ந்து இருக்கிறார். இன்னும் சரிவதற்கு வாய்ப்பு உள்ளது என்றே கூறுகின்றனர்!

எப்படி இந்தத் திடீர் உயர்வும், சரிவும் ஏற்படுகின்றன? அதானியின் இந்த மிகப்பெரிய வளர்ச்சி கடந்த நான்கு ஆண்டுகளில் ஏற்பட்டது. 2014 தொடங்கிய அவருடைய பொருளாதார வளர்ச்சி ஏறுமுகத்தில் இருந்தது என்றாலும், இந்த மூன்று ஆண்டுகளில்தான் அது உச்சம் தொட்டது. வெறும் ஒன்றரை லட்சம் கோடியாக இருந்த அவருடைய சொத்து மதிப்பு, மூன்றே ஆண்டுகளில் 10 லட்சம் கோடியாக உயர்ந்திருக்கிறது. அதுவும் கொரோனாவில் உலகமே சுருண்டு கிடந்த காலத்தில், மக்கள் அனைவரும் பொருளாதார பாதிப்புக்கு உள்ளாகி இருந்த நேரத்தில், அதானியின் சொத்து மதிப்பு மட்டும் 800 மடங்கு பெருகி இருக்கிறது என்றால், இது நேர்மையானதாக இருக்க வாய்ப்பு இல்லை.

ஆஸ்திரேலியாவுக்கு சென்ற பிரதமர் மோடி, அவர் சென்ற அதே விமானத்தில் அதானியையும் அழைத்துச் சென்று, ஒரு பெரிய தொழில் ஒப்பந்தத்திற்கு வழிவகுத்தார். இப்படி அரசாங்கத்தின் உதவியோடும், பல்வேறு பொய்யான வழிகளிலும் வளர்ச்சி காட்டி, அதானி தன் பொருளாதாரத்தைப் பன்மடங்கு உயர்த்திக் கொண்டார்.

அமெரிக்க நிறுவனமான ஹின்டன் பார்க் ஆய்வு செய்து, அதானி மோசடிகளை இப்போது வெளிக் கொண்டு வந்துள்ளது.




ஹின்டன்பர்க் என்பது ஒரு சிறிய நிறுவனம்தான். ஆனால் ஏற்கனவே இப்படி மோசடி செய்த பதினைந்து உலக நிறுவனங்களை அது தோலுரித்துக் காட்டி உள்ளது. இப்போது அதானி பதினாறாவதாகச் சிக்கி உள்ளார்.

பல நாடுகளில் இருந்து அதானி குழுமத்திற்குப் பங்குகள் வருவதாகக் கணக்குகள் காட்டப்பட்டன. அந்த நாடுகளுக்கு எல்லாம் அந்நிறுவனம் நேரடியாகச் சென்று, வெறும் ஷெல் கடைகள் மட்டுமே – அதாவது ஏறத்தாழ நம்மூர் பெட்டிக்கடைகள் மட்டுமேதான் – அங்கு இருப்பதாகவும், அவற்றை ஊதிப் பெருக்கி உண்மைகளை மறைத்து, அதானி குழுமம், இன்றைய இந்திய அரசின் துணையோடு வளர்ந்து இருக்கிறது என்றும் கூறி உள்ளது.

1999 ஆம் ஆண்டு அதானியின் தம்பி ராஜேஷ் சாந்திலால் அதானி பெரும் மோசடியில் சிக்கியதையும் அது எடுத்துக்காட்டி உள்ளது. ஹின்டன்பர்க் நிறுவனம் கடந்த 23ஆம் தேதி தன் அறிக்கையை வெளியிட்டது. அதில் 88 கேள்விகளை அது தொடுத்திருந்தது. எதற்கும் அதானி குழுமம் இன்று வரை சரியாக விடை சொல்லவில்லை. 66 கேள்விகளுக்கு ஏற்கனவே தாங்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் விடை உள்ளதாகவும், மீதமுள்ள கேள்விகள் அர்த்தமற்றவை என்றும் ஒரே வழியில் கூறிவிட்டது.

அதன் பிறகுதான் அதானி குழுமத்தின் பங்குகள் மளமளவென்று சரியத் தொடங்கின. அதானி குழுமத்தில் முதலீடு செய்திருந், இந்தியஉயிர்க் காப்பீட்டுக் கழகம் (LIC), இந்திய அரசு வங்கி (SBI) ஆகியனவற்றின் பங்குகளும் இப்போது சரிந்து விட்டன.

மக்களின் பணம் இப்படிக் கரைந்து கொண்டிருக்கிறது. அதானி சொல்கிறார், அமெரிக்க நிறுவனத்தால் இந்தியாவுக்கே ஆபத்து வந்துவிட்டது என்று! தனக்கு ஆபத்து வந்தால் நாட்டுக்கே ஆபத்து வந்து விட்டதாகக் கூறும் “பெரிய மனத்தின்” வெளிப்பாடு இது!

ஹின்டன்பர்க் நிறுவனத்திற்கு உள்நோக்கம் இருக்கிறது என்று பாஜகவினர் கூறுகின்றனர். அதாவது அரபு நாடுகளில் இருந்து எண்ணெய் வாங்குகிற போது, அமெரிக்க டாலருக்குப் பதிலாக, மோடி அரசு ரஷ்ய நாட்டு ரூபிள்களைக் கொடுத்து வாங்குவதாகவும், அந்தக் கோபத்தில்தான் இந்த நிறுவனம் இப்படிப்பட்ட செய்திகளை வெளியிட்டுள்ளது என்றும் என்கின்றனர். அது உண்மையாகவே இருந்து விட்டுப் போகட்டும். என்ன நோக்கத்திற்காக இந்த நிறுவனம் இப்படிச் செயல்படுகிறது என்பது குறித்து நமக்குக் கவலை இல்லை. அந்த நிறுவனம் தரும் செய்திகள் உண்மையா என்பதில்தான் நம் கவனம் இருக்க வேண்டும். அந்தச் செய்திகள் உண்மையானவைதான் என்பதை அந்த நிறுவனத்தின் அறிக்கை தக்க சான்றுகளோடு எடுத்துக்காட்டி உள்ளது.

இப்படி லட்சம் கோடிகளில் நாட்டுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் நட்டம், மோடி அரசின் முகத்திரையை கிழித்து தொங்க விட்டிருக்கிறது. ●

# பன்முகத்தன்மையைப் பாதுகாக்கும் இந்திய ஒற்றுமை நடைப்பயணம்

**ஆ.கோபண்ணா,**
**தலைவர், ஊடகத் துறை, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி**

**2014** தேர்தல் சமயத்தில் பாஜகவின் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்ட மோடி நிறைய வாக்குறுதிகளைக் கொடுத்தார். கொடுத்த வாக்குறுதிகளில் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. 2009இல் 2014ஆம் ஆண்டை விட 283இலிருந்து 303ஆக – அதிக இடங்களில் அவர் வெற்றி பெற்றார். அதற்குப் புல்வாமா போன்ற நிகழ்வுகளின் மூலம் மதரீதியாக மக்களை அணி திரட்டி, வாக்கு வங்கியை விரிவாக்கி, தேர்தலில் வெற்றி பெறும் உத்தியைக் கையாண்டார்கள். அதுதான் குஜராத் மாடல். குஜராத் மாடல் என்பது வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதல்ல. வெறுப்பு அரசியல். மதத்துவேஷம் செய்து மதரீதியாக மக்களைப் பிளவுபடுத்தி வாக்கு வங்கியை உறுதி செய்து, அதன் மூலம் வெற்றி பெறுவது. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி மக்கள் முன்னேற்றப் பணிகளுக்கு பாடுபட்டு அவர்கள் வாக்குகளைப் பெறவில்லை.

303 இடங்களில் சிறுபான்மை சமூகத்தினர் யாருமே இல்லை. இது சுதந்திர இந்தியா காணாத மிகப்பெரிய அச்சுறுத்தல். சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாமலே, இருபது கோடி பேரைப் புறக்கணித்துவிட்டு ஒரு அரசாங்கம் 9 ஆண்டுகளாக நடக்கிறது. உத்தர பிரதேசத்தில் இஸ்லாமியர்கள் 21 சதவீதம் இருக்கிறார்கள். ஒருவர் கூட வெற்றி பெற முடியாத வகையில் ஆதித்யநாத் அங்கே செயல்படுகிறார். இப்படி ஒவ்வொரு நிலையிலும் செயல்படுகிறார்கள். இதையும் மீறி கர்நாடகாவில், மகாராஷ்டிராவில், மத்திய பிரதேசத்தில், ராஜஸ்தானில், சத்தீஸ்கரில், ஜார்கண்டில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. அதற்குப் பின் எம் எல் ஏக்களை, 15 பேர் 20 பேர் என மொத்தமாக விலைக்கு வாங்குவது, அவர்களைப் பதவியை ராஜினாமா செய்யச் சொல்வது, மறுபடியும் அவர்களைத் தேர்தலைச் சந்திக்க வைத்து, பணம் செலவழித்து பாஜக எம்எல்ஏவாக ஆக்குவது. இப்படிப் பல உத்திகளைக் கையாண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கவிழ்த்திருக்கிறார்கள். இது ஆபத்தான போக்கு. இதை எப்படி எதிர்கொள்வது, எப்படி முறியடிப்பது? அரசமைப்புச் சட்டம் உருவாக்கிய அனைத்து அமைப்புகளும் சீர்குலைந்து போகின்றன. எல்லாமே பாஜகவின் கைப்பாவைகளாகிவிடுகின்றன.

இந்த நிலையில், மக்களைப் பிளவுபடுத்துகிற அரசியலுக்கு எதிராக மக்களை ஒன்றுபடுத்துகிற முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று நீண்ட காலமாகத் திட்டமிட்டு இராகுல் காந்தி இந்திய ஒற்றுமை நடைப்பயணத்தை மேற்கொண்டார். இந்தப் பயணத்தைக் கன்னியாகுமரியில் செப்டம்பர் 7ஆம் தேதி தொடங்கி வைக்கும் பெருமை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தமிழ்நாட்டின் முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களுக்கு வழங்கப்பட்டது. 12 மாநிலங்கள் கடந்து, 4000 கிலோமீட்டர், 135 நாள்கள் நடந்து சென்று காஷ்மீரில் பல்வேறு பிரச்சனைகள், பாதுகாப்புக் குளறுபடிகள் ஏற்பட்டு பனி மழையின் காரணமாக நிறைவு நிகழ்ச்சி என்பது கோலாகலமாக நடைபெறவில்லை. இருப்பினும் ராகுல் காந்தி அதில் புத்தொளியுடன் உரையாற்றினார். இந்த நாட்டை நேசிக்கிறவர்கள், மனிதர்களை மனிதர்களாகக் கருதுபவர்கள் அவருடைய உரையின்பால் ஈர்க்கப்பட்டார்கள். இதன் வெற்றி என்னவென்றால் ஒரு அரசியல் கட்சியின் நடைப்பயணமாக இல்லாமல் தேச நலன் கருதி அனைத்துத் தரப்பினரும் அவரோடு இணைந்து நடந்தார்கள். அவரோடு உரையாடினார்கள். ராகுல் காந்திக்கும் மோடிக்கும் என்ன வேறுபாடு என்றால், ராகுல் காந்தி மக்களைச் சந்திக்கிறார், மக்களோடு பழகுகிறார், அவரை நெருங்குவதற்கு எந்தத் தடையும் கிடையாது. இதையெல்லாம் பிஜேபியில் எதிர்பார்க்க முடியாது. மோடியிடம் அமித்சாவிடம் எதிர்பார்க்க முடியாது. அவர்கள் யாரோடும் உரையாட மாட்டார்கள். அவர் பேசுவார், மற்றவர்கள் கேட்க வேண்டும். நாடாளுமன்ற விவாதங்களிலேயே பங்கெடுத்துக் கொள்ளாத ஒரு பிரதமரை நாம் பெற்றிருக்கிறோம். பத்திரிக்கையாளர்களைச் சந்திக்காத பிரதமரை நாம் பெற்றிருக்கிறோம். ஜனநாயகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வாதிகாரியாக அவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இதை எதிர் கொள்ளத்தான் இந்தப் பயணத்தில் இராகுல் காந்தி தன்னை வருத்திக்கொண்டு, இந்த நாட்டை அச்சுறுத்துகிற வகுப்புவாத சக்திகளை முறியடிக்கிற ஒரு நோக்கத்தில், பிளவு அரசியலை எதிர்த்து ஒன்றுபடுகிற அரசியலுக்காக அவர் நடந்திருக்கிறார்.



மக்களை ஒன்றுபடுத்துவதற்கான இந்திய ஒற்றுமை நடைப்பயணத்தை அவர் மேற்கொண்டாலும் மக்களிடம் கிடைத்த வரவேற்பு, ஊடகத் தடைகளையும் மீறி சமூக ஊடகங்களில் கிடைத்த வெளிச்சம், இவையெல்லாம் அரசியல் கட்சிகளிடையே ஒரு நிர்ப்பந்தத்தை உருவாக்கி இருக்கின்றன. மோடியை எதிர்க்கிற, மோடியை வீழ்த்த வேண்டும் என்று நினைக்கிற, மோடியினால் இந்த நாட்டுக்குப் பேராபத்து என்று கருதுகிற அனைத்து அரசியல் கட்சிகளும் 2024 மக்களவைத் தேர்தலில், ஒன்று சேர்ந்து காங்கிரஸ் தலைமையிலான ஒரு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை அமைக்கும். அனைத்து மாநிலக் கட்சிகளையும் அரவணைத்துச் செல்லுகிற அந்தக் கூட்டணியின் ஒரே நோக்கம் மோடியை ஆட்சியைவிட்டு அகற்றுவதுதான். யார் பிரதமராக வரவேண்டும் என்பதல்ல. இராகுல் காந்திக்குத் தான் பிரதமராக வரவேண்டும் என்கிற ஆசை கிடையாது. மோடி என்கிற வகுப்புவாத அரசியல் செய்கிறவர் அகற்றப்பட வேண்டும் என்பதுதான் இராகுல் காந்தியின் நோக்கம். அவர் மகாத்மா காந்தியால் அதிகமாக ஈர்க்கப்பட்டவர். அதனால்தான் மகாத்மா காந்தியின் தண்டி யாத்திரை, நவகாளி யாத்திரை போன்று அவர் இந்த யாத்திரையை மேற்கொண்டிருக்கிறார். மக்களிடம் செல்வதுதான் காந்திய வழி. அதை இவர் மேற்கொண்டிருக்கிறார். இந்தியாவின் பன்முகத்தன்மையை, பன்முகக் கலாச்சாரம் பண்பாட்டை, பல்வேறு மொழி பேசுகிறவர்களை மதிப்பதும், மாநில உரிமை மாநிலக் கட்சிகளை மதிப்பதும்தான் இந்திய ஒற்றுமை நடைப்பயணம். இந்திய அரசியலில் இது நிச்சயம் திருப்புமுனையை ஏற்படுத்தும். இராகுல் காந்தியின் உழைப்பு வீண் போகாது. அந்த உழைப்புக்கு நிச்சயம் பலன் கிடைக்கும். ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## மதத்தை மறுதலியுங்கள்! தமிழர்களுக்கு மறுமலர்ச்சியைக் கொடுங்கள்!

இலங்கையில் ஈழத் தமிழர்கள் வசிக்கும் மாகாணங்களுக்கு அரசியல் தன்னாட்சி அதிகாரம் வழங்க வழிவகுக்கும் 13ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த இலங்கையின் பவுத்த மத குருக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

1987ஆம் ஆண்டு இந்தியா-இலங்கை இடையேயான ஒப்பந்தப்படி 13ஆவது சட்டத்திருத்தம் செய்யப்பட்டது. 35 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தச் சட்டத்திருத்தத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு நடவடிக்கை மேற்கொண்டுவருகிறது. இத்தனை ஆண்டுகளில் வரலாறு காணாத பேரிழப்புகளையும், அநீதிகளையும் தமிழினம் கடந்து வந்திருக்கிறது.

இலங்கையின் பெரும் பொருளாதார நெருக்கடி, அய். நா மன்றங்களில் கொண்டுவரப்பட்ட இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானங்கள், சர்வதேசப் பொருளாதார அமைப்புகளிடமிருந்து கிடைக்க வேண்டிய உதவிகள் இவற்றின் பின்னணியில் இன்று இலங்கை அரசு வேறு வழியின்றி தமிழர்களுக்குத் தன்னாட்சி அதிகாரம் அளிக்க முனைந்திருக்கிறது. இதில் தமிழர்கள் நலன் மட்டுமில்லை, சிங்களவர்களின் நலனும் உள்ளடங்கியிருக்கிறது. ஆனால் மத நிறுவனம் அடிப்படைவாதத்தை இனவாதத்தை முன்வைத்து, இதனை எதிர்க்கிறது.

மதவாதிகள் இராஜகுருக்களாக நேரடியாகவும் மறைமுகவாகவும் செயல்படுவார்கள். ஆனால் பதில் சொல்ல வேண்டிய இடத்திலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பதில் சொல்ல இலங்கை அரசைத்தான் சர்வதேசச் சமூகம் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியது. அரசு மட்டும்தான் குற்றவாளியா? சிங்கள-பவுத்தப் பேரினவாதத்தை விதைத்துப் பரப்பிய மதகுருக்கள்? அரசை வழிநடத்துகிற, அதிகாரத்தில் செல்வாக்கு செலுத்துகிற மத நிறுவனம் பழிகளிலிருந்து தப்பித்துக் கொள்கிறது. பொருளாதார நெருக்கடியால் மக்கள் வீதிகளில் அரசை எதிர்த்துத்தான் போராடினார்கள். மதகுருக்களை எதிர்த்து அல்ல. இதை ஆட்சியில் இருப்பவர்கள் உணர வேண்டும்.

அன்பைப் பரப்புவதாக மதம் காட்டிக்கொள்ளும். ஆனால் சிறுபான்மையினரை வாட்டிக்கொல்லும். இலங்கையின் அரசியலாளர்கள் மத நிறுவனத்தைப் புறந்தள்ளிவிட்டு, பொறுப்போடு செயல்பட வேண்டும். தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதுவும் ஈடாகாது. 13ஆவது சட்டத்திருத்தத்தையாவது நடைமுறைப்படுத்துங்கள்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408






மதவெறிக்குப் பலியான அண்ணல் காந்தியார் நினைவுக் கருத்தரங்கம் 30.01.2023 அன்று சென்னை தேவநேயப் பாவாணர் அரங்கில் நடைபெற்றது. பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் தலைமை வகித்த இந்நிகழ்வில் தோழர் மார்க்ஸ், திரு. பீட்டர் அல்போன்ஸ் (மாநில சிறுபான்மை நல ஆணையத் தலைவர்), தோழர் விஜயசங்கர் (ப்ரண்ட்லைன் முன்னாள் ஆசிரியர்), சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் ஆகியோர் உரையாற்றினர்.




இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் சார்பில் 04.02.2023 அன்று பேரறிஞர் அண்ணா மற்றும் திராவிட மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் இருவரின் நினைவைப் போற்றும் வகையில் நடைபெற்ற புகழ்வணக்க நிகழ்ச்சியில் தோழர் கம்பம் செல்வேந்திரன், தோழர் பொழிலன் ஆகியோர் புகழுரை வழங்கினர்.


# புல்டோசர் அரசியல்

நூல் அறிமுகம்

## சோழ. நாகராஜன்

திராவிட இயக்க அரசியலுடன் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டவர் அருமைத் தோழர் சாரதா தேவி. காஞ்சியைச் சேர்ந்த அவர் வங்கி அதிகாரியாகப் பணியிலிருந்த காலம்தொட்டே சமூக உணர்வோடு பல்வேறு நற்பணிகளில் ஈடுபட்டு வருபவர். தற்போது அந்தப் பணியையும் உதறிவிட்டு தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றத்திற்குத் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்துள்ளார்.

வர்ணாசிரம மதவாதம், சாதீயம், பெண்ணடிமை, ஆண் மேலாதிக்கம், தீண்டாமை, வடமொழி மற்றும் இந்தித் திணிப்பு போன்ற எண்ணற்ற தடைகள் தமிழரின் - தமிழ்ப் பெருநிலத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகளாக நீண்ட நெடிய காலமாகவே இருந்துவரும் நிலையில் ஓரளவிற்கேனும் விழிப்புணர்வு தோன்றியிருக்கும் தற்போதைய காலத்தில் தோழர் சாரதா தேவி போன்றோர் களமிறங்கியிருப்பதுவும் பெரும் நம்பிக்கையைத் தருவதாகும். திராவிட இயக்கத்தின் அடிப்படைகளைத் தன் கருத்தியல் இயங்குதளமாகக் கொண்டிருக்கும் நூலாசிரியரின் தீர்க்கமான பார்வை ஒவ்வொரு கட்டுரையிலும் மிகவும் இயல்பாக வெளிப்பட்டிருப்பது சிறப்பு.




காத்திரமான கவிஞரும், எழுத்தாளரும், பேச்சாளருமான தோழர் சாரதா தேவி எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ள இந்த புல்டோசர் அரசியல் எனும் சீரிய தொகுப்பில் மொத்தம் 35 கட்டுரைகள். பல்வேறு தேவைகளையொட்டி, அவ்வப்போது எழுதப்பட்ட கட்டுரைகள். குறுகத் தரித்தாலும் பொருளில் கனமும் செறிவுமான கட்டுரைகள். பெரும்பாலும் கருஞ்சட்டைத் தமிழர் மின்னிதழில் வெளியானவையே இந்தத் தொகுப்பினில் இடம்பெற்றுள்ளன. தேசம் முழுவதும் இந்துத்துவ சனாதன சக்திகள் தலைதூக்கியிருக்கிற இந்த வேளையில், அவை தமிழகத்தையும் கபளீகரம் செய்யத் துடிக்கிற தற்கால நிலைமையில் அவற்றை எதிர்த்து நிற்கிற கருத்தியல் ரீதியிலான தார்மீக பலத்தைத் தருவனவாக இந்தக் கட்டுரைகள் இருப்பதை நிச்சயம் உணர முடிகிறது.

இந்திய மண்ணில் இஸ்லாமியர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாகக்கூட வாழத் தகுதியற்று அஞ்சிக் கிடக்கவேண்டிய நிலையினை உருவாக்கி வைத்திருக்கிற அவலத்தைச் சுட்டும் வளைகுடா நாடுகளின் சாட்டை எனும் தலைப்பிலான கட்டுரைதான் நூலின் முதல் திறப்பாக உள்ளது. முகமது நபியவர்களைப் பற்றி அவதூறாகப் பேசப்போய் அது இஸ்லாமிய உலகினையே கொதித்தெழச் செய்ததையும், அதனால் இந்திய ஆட்சியாளர்கள் மண்டியிடவேண்டி வந்தமையையும் விளக்கி, இந்தியா வாழ் இஸ்லாமியர்களின் வாழ்வியல் மாண்புகளுக்குத் துணை நிற்பதாக இந்தக் கட்டுரை மிகச் சரியாக அமைந்திருக்கிறது.

அதுபோல, பன்னாட்டுப் பெண்கள் தின வரலாற்றைச் சொல்லும் கட்டுரை தங்களுக்கெதிரான சுரண்டலுக்கு எதிராகப் பெண்கள் முன்னெடுத்த போராட்டத்தால் ஆண்களும் பலனடைந்து, இன்றைக்கு 8 மணி நேர வேலை என்பதை அனுபவிக்க நேர்ந்ததைச் சொல்லுகிறது. பெண் சமத்துவமும், அங்கீகாரமும் அவர்களுக்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த மானுடத்திற்கே நன்மை பயக்கக்கூடிய தன்மையது என்பதை அது மெய்ப்பிக்கிறது.

அரசியல் முக்கியத்துவத்தையெல்லாம் கடந்து, வாசிக்கிறபோதே நம் நெஞ்சைப் பிழிந்துபோடும் ஒரு கட்டுரை பெண்களைத் துரத்தும் மரணங்கள் என்பது. ஒரு திகிலூட்டும் மர்மக்கதையைப்போல தொடங்கி, காதல்வயப்பட்டு மடியும் பெண்களுக்காக - குறிப்பாகப் பெண் கலைஞர்களுக்காக நியாய உணர்வோடு பரிந்துபேசும் கட்டுரை மிகமிக காத்திரமான சொற்பிரயோகங்களோடு, உணர்வுமயமாக, உண்மையை விளம்புகிறது. அதி உன்னதமான பெண்ணிய நிலைப்பாட்டில் நின்றுகொண்டு, இந்தச் சமூகத்தின் ஆணாதிக்கக் கேடுகளின் முகங்களைக் கிழித்துப்போடுகிறது. வரலாற்றுப் பார்வைத் தெளிவோடும் இந்தக் கட்டுரை உருப்பெற்றிருப்பதுவும் கூடுதல் சிறப்பு.

“”அன்போ, நேரமோ, கவனமோ, பொருளோ எல்லாவற்றையும் தானே அபகரித்துக்கொள்ளும் நடத்தைக்குப் பெயர்தான் கணவனா?”” - என்று பொட்டிலடித்தாற்போல வினவும் தருணத்தை எதிர்கொள்ளும் எந்த ஆணாதிக்கவாதியின் உள்ளமும் நடுங்கவே செய்யும். பெண்ணை ஆற்றல்படுத்த ஒரு தலைமுறை உழைத்த இச்சமூகம், ஆற்றல்படுத்தப்பட்ட பெண்ணோடு வாழ ஆணைப் பழக்கவில்லை என்று கட்டுரையாளர் முன்வைக்கும் விமரிசனம் எப்போது வழக்கொழியுமோ தெரியவில்லை. இத்தனையையும் பெண்ணின் தலையில் இடியென இறக்கும் ஆணாதிக்கத்தை வாழத்தெரியாத ஆண் சமூகம் என்கிறார். ஆம், தான் வாழத்தெரியாத நிலையில்தான் அது பிறரையும், அதாவது பெண்களையும் வாழவிடுவதில்லை என்பது புதிய முன்வைப்பு மட்டுமல்ல, நிதர்சனமும்தான்.

நூலின் தலைப்புக் கட்டுரையான புல்டோசர் அரசியல் நாடெங்கிலும் சட்டவிரோதமாக அனுமதியின்றிக் கட்டப்பட்டுள்ளதாகக் கூறிக்கொண்டு இஸ்லாமியர்களின் வீடுகளை எந்தவித அறிவிப்போ, பேச்சுவார்த்தையோ, சட்டவழிகளோ அல்லாமல் புல்டோசர்களின் துணைகொண்டு இடித்துத் தள்ளுகிற செயல் ஒன்றையே மேற்கொள்ளத் துணிந்த அருவெறுக்கத் தக்க இஸ்லாமிய எதிர்ப்புச் செயல்பாட்டைக் கடுமையாகச் சாடுகிறது. இதற்கு அச்சாரமிட்டதாக காஷ்மீர் ஃபைல்ஸ் எனும் வரலாற்று மோசடித் திரைப்படம் அமைந்துவிட்டதாக நிறுவுகிறார் கட்டுரையாளர்.

இன்னும் இதுபோல ஒவ்வொரு கட்டுரை குறித்தும் சொல்வதற்கு நிறைய இருக்கின்றன. சாதித்துக்காட்டிய ஸ்டாலின், பிடிஆரின் முதல் நிதிநிலைத் திட்ட அறிக்கை, ஓமந்தூரார் மாளிகை - கலைஞரின் கனவு நனவாகுமா?, குடியுரிமைத் திருத்தச் சட்டமும் தமிழ்நாட்டின் எதிர்ப்பும், தில்லைக் கோயிலின் தீண்டாமை, பேரறிஞர் அண்ணாவின் தீர்மானமும் தமிழ்நாடு நாளும் போன்ற இன்னும் பல கட்டுரைகளும் வாசிக்கவும், மனங்கொள்ளவும் வேண்டிய அவசியத்தை உணர்த்துவனவாகும்.

பலதரப்பட்ட பேசுபொருள்களின் தொகுப்பெனவே வந்துள்ள தோழர் சாரதா தேவியின் 5வது படைப்பு இந்த நூல். தற்போது திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் செயற்பாட்டாளரான தோழர் சாரதாவின் பிற நூல்கள் உலை எனும் கவிதைத் தொகுப்பு, எல்லார்க்கும் எல்லாமும் எனும் சிறுகதைத் தொகுப்பு மற்றும் கருப்பும் நீலமும், ஆளுமைகள் ஆகிய கட்டுரைத் தொகுப்பு முதலானவை ஆகும்.

168 பக்கங்களைக் கொண்ட, ரூபாய் 170 விலையுள்ள இந்த புல்டோசர் அரசியல் நூலினைக் கருஞ்சட்டைப் பதிப்பகம் மிகச் சிறந்தமுறையில் அச்சிட்டு, வெளியிட்டுள்ளது. எளிய சொற்கட்டுமானத்தோடு, உறுதிமிக்க அரசியல் தெளிவும் பார்வையும் கொண்ட இந்தக் கட்டுரைகளை அரசியல் களத்தின் செயற்பாட்டாளர் ஒவ்வொருவரும் வாசிப்பது மெய்யாகவே பயனுள்ளதென்பதில் ஐயத்திற்கு இடமில்லை. ●